IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# கம்பனும் மாணிக்கவாசகரும்

**வெ.ரஞ்சனி முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர் பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**கடலூர்**
**நெறியாளர் பா. கீதா உதவி பேராசிரியர்**
**கடலூர்**
**பெரியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**திருவள்ளுவர் பல்கலைக்கழகம்**

## முன்னுரை:

கவிதை உணர்வு நிலை கூறியது உணர்வு நிலையில் கடந்து நின்ற ஒன்றுமை கம்பருக்கும் உண்டு மணி வாசகருக்கும் உண்டு. சிவனை வேண்டிய மாணிக்கவாசகரின் நிலையும் ராமனை வேண்டிய கம்பனின் நிலையும் ஒப்பிடக் கூடியவை.

## பழமை நாட்டம்-புதுமைப் பாலம்:

கம்பன் கண்ட கதையின் சாரம் கம்பன் விரும்பிய புதுமை ஆகியன அவன் தன்னை பழமை பண்பாட்டில் அமைத்துக் கொண்டு புதுமை வானத்தை தொடக்க கைப்பரப்பிய தன்மையினை காட்டுகின்றன உலக நூல்களில் பழமையான ரிக் வேதத்தில் உழவு தெய்வமாக பாடப்படும் சீதை புதுமை பண்பாட்டிற்கு பாலம் இடுகிற இந்திய பண்பாட்டு குறியீடாக கம்பனார் சித்தரிக்கப்படுகிறாள் மாணிக்கவாசகர் இறை அனுபவச்சாரத்தையே பழமைக்கும் புதுமைக்கும் உரித்தாக்குகிறார்.

"முன்னே பழம்புறுக்கு முன்னே பரம்பொருளே பின்னை புதுமைக்கும் போர்த்தும் அப்பெறியனே"என்பது அவர் வாக்கு.

## குரு சீடன் உறவு:

கம்பனுக்கும் மாணிக்கவாசகருக்கும் ஆன்ம அனுபவம் கவிதையாயிற்று. கம்பன் வன்மையின் புலமையில் ஐக்கியமாகாமல் ராம பக்தியில் ஐக்கியமானார் மக்கள் கவிதையாக்க முயன்றார் மாணிக்கவாசகர் முன்னோடியாய் இல்லாமல் தம் அனுபவம் சார்ந்த உணர்வோடு சிவபக்தியை ஐக்கியமானார் இறைவன் மாணிக்கவாசகரை குறுவடிவில் ஆட்கொண்டான். அதனை தட்சிணாமூர்த்தி கோலம் என்று கூறுபவரும் உள்ளனர். சங்கநாளில் தட்சிணாமூர்த்தி என்ற பெயர் இல்லை ஆளவர் செல்வன் என்ற இணையான பெயர் சிலம்பில் இடம் பெற்றுள்ளது கிபி எட்டாம் நூற்றாண்டில் சங்கரரும் தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரம் பாடி உள்ளார். மாணிக்கவாசகருக்கு இறைவன் உருவாகினார். வாசகர் சீடன் ஆகிறார். கம்பராமனை உருவாக்கி காட்டுகிறார் தம்பியரும் சேர்ந்த தம்பியரும் சீடராக படைக்கப்படுகின்றனர். அனுமன் சீடனாக சித்தரிக்கப்படுவது சிறப்புக்கும் சிந்தனைக்கும் முரியது.

## ஆட்கொண்ட எழுத்து:

சிவ என்பது பழைய சொல் வடிவம் சிவன் என்பது மங்கள வழக்குச் சொல்லாகும் அவனுடைய பெயரை ருத்ரன் ருத் -துன்பம் த்ரயவதி-துன்பத்தை ஓட்டுபவன் (இன்ப உருவினான்) இன்ப நிலை குரிய ஐந்து எழுத்து நமசிவாய மாணிக்க வாசகரை ஆட்கொண்டது அதை five letters என ஜி யு போப் குறிப்பிடுவது சிந்தனைக்குரியது. கம்பனை இரண்டெழுத்து ஆட்கொண்டது அது ராம என்னும் சொல்லடைவு. 'ராம-இனிமையானவன்'

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
திண்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றி தீருமே
இம்மையே ராம என்று இரண்டெழுத்தினால்"

வாலி ராம நாமத்தைக் கண்களில் தெரிய கண்டதும் உள்ளவதற்குரியது

## பாடாததை பாடியவர்:

சிந்தனை ஒன்றுடையவர் கருத்து காலத்தால் வேறுபட்டிருப்பிலும் கற்பனை ஓட்டத்தில் ஒன்றி நிற்கிறது பிற ஏழு திருமுறைகளிடம் மூவர் பாடாத சக்தியை மாணிக்கவாசகர் திருவம்பாவையில் பாடுகிறார் மாணிக்கவாசகர் பாவை பாடலை தேர்ந்தது போல கம்பன் சுந்தரகாண்டத்தை தேடுகிறான்.

## பணிவின் பக்குவம்:

பணிவு பூண்டார்கே பக்தி வசமாகும் தம்மை நாய் என தாழ்த்திக் உரைக்கும் பாங்கு மாணிக்கவாசகரிடம் பரவலாகக்காணப்படுகிறது

**“நாயிற் கடையாம் நாயேனை**
**நயந்து நீயே அக்கௌன்டாய்-குழைத்த பத்து**
**நாயினை தண்டிகள் பாடி வித்த நாயகனே-திருக்கோத்தும்பி**

என்ற விடத்து மாணிக்கவாசகரின் குறித்த ஜி .யு .போப் “he gave your royal seed to me a dog” என மொழிபெயர்ப்பிலும் பணிவின் உச்சத்திற்கே பக்தியை கொண்டு செல்கிறார். கம்பெனிலும் பணிவைப் பரவலாக பெற முடியும் ராகவனும் தம்பி ஏகும் குகனும் பிறரும் காட்டுப் பணிவு பணிவின் இலக்கணம் கற்பிக்கும் ஏழு மரங்களை உருவி வேறு இலக்கு இளாய் நிலையில் ராகவன் பகழி மீண்டது அதை சுக்ரீவன் வாழ்கிறான் தன் என்ன திருத்தி உரைக்கிறான்.

வையம் நீ !வானும் நீ !மற்றும் நீ !மலரின் மேல் அயன் நீ !நாயினேன் உய்ய வந்து உதவினாய் உலகம் முந்து உதவினாய் (மரமரப்படலாம்)

## கானா பரம்பொருள் கண்ட செம்பொருள்:

**இறைவனை காணும் முயற்சியே பரவச உணர்ச்சியாம்.**
**வானாகி மண்ணாகி வழியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையும் ஆகி இம்மையுமாய்**
**கோனாகியான் எனது அற்று அவரவரை கூத்தாட்டு**
**வானாகி நின்றாயே என் சொல்லி வாழ்த்துவனே”**

என வாசகர் சுட்டும் நிலையில் காணா பரம்பொருள் உட்பொருளாய் நிற்பது அறிவுறுத்தப்படுகிறது. உயிர்களிலும் பொருட்களிலும் ஊடுருவி நிற்கும் நெறி சிவநெறி. அதுவே இரண்டற அத்வைத நிலையம் ஆகும். வாசகரின் ‘ஒளி

‘கம்பனுக்கும் வழி சமைக்கிறது. இருப்பினும் அப்பேரொளியை வருணிக்க வருநிலையில் வார்த்தை முற்றுப்பெறுகிறது.

**“வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியின் மறைய**

**பொய்யோ எனும் இடையாளோடும் இணையானோடும் போனான்**

**மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ**

**ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்.”**

கண்ட செம்பொருள் “ஐயோ” என வியத்துள்ளார் உணர்வுக்கு ஆளாகிறது.

## சொல்லாட்சி:

சொல்லாட்சி ஒப்புமை ஒப்பியல் நோக்கில் இன்றியமையது ஆகிறது

“பித்தா பிறைசூடி”..... என்று சுந்தரர் அழைத்த வாசகம் சிறப்புடையது. “பிட்டு நேர்பட மண் சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே”என்பது மணிவாசகர் வாக்கு. கம்பனுக்கும் இச்சொல் சிந்தையேறி நின்றது.

**“சித்திர வனமுலைச் சீதை செவ்வியால்**

**முத்தனார் மிதிலையூர் அறிவு முற்றிய**

**பித்தன் வெஞ்சிலையினை இருத்த பேரொலி**

**ஒத்தது சூலம் அன்று இற்ற ஓசையே**”

கும்பகர்ணனின் சூலத்தை அனுமன் ஒடித்த ஓசைக்கு ராமன் மிதிலையில் உடைத்த சிவதனசுவீர் கேட்ட பேரோடியை உவமையாக்குகிறான்.

வைணவக் கதையைப் பாடும் கம்பன் நயத்தக்க நாகரிகம் வேண்டி “அறிவு முற்றிய”என்னும் பண்புடை அடைமொழி பெய்தது உழுதற்கினியதாம். ஒரு உண்மை நிலையில் சிவனுடைய செவ்வியராமனின் செவ்வியோடு கம்பன் ஒப்பிடுவது இனியது. வீடெனன் அடைக்கலமாக வந்து சேர்ந்தபோது தன்னை இராமன் ஏற்றுக்கொண்ட பாங்கினுக்கு உவமை கூறுகிறான். “சிவன் நஞ்சை உண்டான் அதனால் நஞ்சு சிறப்படைந்தது அதுபோல ராமன் என்னை ஆட்கொண்டான் யான் சிறந்தேன்”

**“தாழ் சடை க்கடவுள் உண்ட**

**நஞ்சனச் திறந்தேன் அன்றோ**

**நாயகன் அருளின் நாயேன்”**

என்பது கம்பன் வாக்கு. ஆண்டவன் திருவாதவூர்க்கு சொல்லாகிய மணிகொண்டு அன்பாகிய வடத்தில் கூத்து ‘மாணிக்கவாசகர்’ என்று பெயர் சூட்டினார்

ராமன் அனுமனுக்கு ‘சொல்லின் செல்வன் ‘என்று பெயரிட்டு வியந்தான். ‘வாழக்கில்லேன் கண்டாய்’ என்று ஆண்டாள் இறைஞ்சியது போல் மாணிக்கவாசகர் ‘வாழாபத்தில்’ ‘வாழகிலேன் கண்டாய்’ என இறைஞ்சி நிற்கிறார். சீதை சுந்தரகாண்டத்தில் அனுமனிடம் ஒரு திங்கள் இரு கல்யான் பின்னை ஆவி பிடிக்கிறேன் என்று கூறும் சூழலும் ஒப்புமைக் ககுறியது.

## முடிவுரை:

கானகம் பிரிந்து ராமனையே தலைமை ஏற்று அறப்பணி மேற்கொண்டான் பறி வாங்கப்பிரிந்து வாசகர் அறப்பணி மேற்கொண்டார். கிளையிலாணை வாசகர் வேண்டினார். மானுடனாய்ப் பிறப்பெடுத்த இறைவன் கிளை பரப்பி அன்பும் அருளும் தழைக்க உதவினார். ‘மண்ணால்வான் மதித்தும் இரேன்’என்ற கம்பன் கதையிலும் இடம்பெறுகிறது. கு.அழகிரிசாமி மொழியில் கூறுவதனால் இருவருக்குமே கவிதை பிராணன் (உயிர்) பிராண உபாயம். “பாற்கடல் உற்று ஒரு பூசை முற்றவும் நற்குபு புக்கேனே”ஆசை பற்றி அறையலுற்ற இவ்வாய்வு பறந்தது மேல் வரும் ஆய்விற்கு வழி சமைப்பது.

**சான்றென்விளக்கம் :**

1. கம்பன் பன்முகப் பார்வை -சாலமன் பாப்பையா **2004**
2. கம்பராமாயணம் ஓர் அறிமுகம் -பேராசிரியர் ஆ . ச.ஞானசம்பந்தன்
3. அருள்மிகு மாணிக்கவாசக ஸ்வாமிகள் அருளிய தேன் தமிழ் திருவாசகம் - பூமாயி பதிப்பாகும் மதுரை.